**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| STC No. | : | 184/2022 |
| Name | : | Dr.Krishnaraj |
| P.W. | : | 8 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**06.03.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது கோவை ராமகிருஷ்ணா மருத்துவமனையில் உதவி இருப்பிட மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.11.2021 ம் தேதி மதியம் 03.25 மணியளவில் சுப்பிரமணி என்பவரை ராஜகோபால் அழைத்து வந்தார். சுப்பிரமணியை அதே நாளில் காலை 05.00 மணியளவில் சாலை விபத்து ஏற்பட்டு மடத்துக்குளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக எங்கள் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். அவரை பரிசோதித்து பார்த்த போது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. தலையில் அடிபட்டு மூளையின் இடது கபால பகுதியில் ரத்தக் கசிவு காணப்பட்டது

2. இடது மூளையின் ஒரு பகுதியிலும், கபால பகுதியிலும் ரத்தக்கட்டு இருந்தது

3. மூளையின் அனேக இடங்களில் ரத்தக் கசிவு காணப்பட்டது

4. மூளையின் உட்பகுதியில் சிறு, சிறு ரத்தக் கசிவுகள் இருந்தன

5. வலது கபால எலும்பு உடைந்திருந்தது.

6. முகம் முழுவதும் சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது.

அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். **காயச் சான்று அ.சா.ஆ.4 ஆகவும், விபத்து பதிவேடு அ.சா.ஆ.5 ஆகவும் முறையே குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) பொதுவாக ஒரு நபர் ஓடிச் சென்று தானாக கீழே விழுந்தால் இது போன்ற காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் இல்லை.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.03.06 12:39:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்